பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம்
தங்க நகைகளால் மின்னிப்
பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1710)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 24 வெள்ளிக்கிழமை 06-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 108

## ★ தமிழ் மக்களுக்கெதிரான
# 60ஆயிரம் மனித உரிமை மீறல்கள்
# இலங்கை மௌனம் சாதிக்கிறது!

### "ஹொங்ஹொங்" மனித உரிமை அமைப்பு கண்டனம்!

(நமது நிருபர்)

**இலங்கையில் அண்மைக்காலங்களில் பரந்தளவில் இடம் பெற்று வரும் காணாமல் போதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும், அது குறித்து இலங்கை அரசு எந்த விதமான நடவடிக்கை களையும் எடுக்காது வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதையும், ஹொங் ஹொங்கில் உள்ள மனித உரிமைகள் அமைப்பொன்று இலங்கை அரசை வன்மையாகக் கண்டித்துள்ளது.**

இலங்கையில்காணாமல்போதல்சம்பவம் தொடர்பாக ஹொங்ஹொங்கில் உள்ள மனித உரிமை அமைப்பு இலங்கை அரசைக் கண்டித்து எழுதியுள்ள அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் அடிக்கடி இடம் பெற்று வரும் காணாமல் போதல் சம்பந்தமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக காலத்துக்குக் காலம் அரசின் கவனத்திற்குக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச கண்காணிப்புக்குழு மூலம் யுத்தநிறுத்தம் அவதானிக்க வேண்டும்

### அமெரிக்க பிரதிநிதி தகவல்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின்மூலம் தீர்வுகாணமுடியாது என்று அமெரிக்காங்கிரசின்மத்திய கிழக்கு தெற்காசியவிவகார உபகுழுத்தலைவரானகில்மன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்ககாங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அந்நாட்டில் வாழும் இலங்கை,இந்திய தமிழ் பிரமுகர்கள் கலந்துகொண்ட சந்திப்பொன்றில்,

யுத்தத்தில் எந்தவொரு தரப்பும் வெற்றிபெறமுடியாது என்றுதெரிவித்துள்ள

→ 8ஆம பக்கம் பார்க்க

## அரசு-புலிகள் பேசுவதற்கு முன்னதாக யுத்தநிறுத்தம் அறிவிக்கப்படும்!

### அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகளினால்மூன்றாவதுதடவையாக நீடிக்கப்பட்ட ஒருதலைப் பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பு இம் மாதம் 24ம்திகதி நள்ளிரவுடன் முடிவடைய இருப்பதால் அதற்கு முன்பாக இலங்கை அரசு யுத்தநிறுத்த அறிவிப்பொன்றை அறிவிக்கும் எனநோர்வே தூதரகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்றத்தில்வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் இம்மாதம் 19ம் திகதியுடன் முடிவடையவிருப்பதால்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### யாழ். மாநகர சபை

## குடும்ப நல சேவையாளர்களின் உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட 36 குடும்பநல சேவையாளர்கள் சுழற்சி முறையில் நடாத்திய உண்ணாவிரதப் போரட்டத்தை நேற்று தற்காலிகமாக நிறுத்திக் கொண்டனர்

தமது கோரிக்கைகளுக்கு நீதிவேண்டி ஆரம்பித்த உண்ணாவிரத அமைதிப்போராட்டம் வடக்கு கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் மற்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் இரு பெண்கள்மீதான பாலியல் பலாத்கார,வன்முறை

### ஈ.பி.ஆர்-எல் எவ் சுபத்திரன் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் கடற்படை மற்றும் பொலிசாரால் குடும்பப் பெண்கள் இருவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தப் பட்டமை,காட்டுமிராண்டித்தனமான செயலாகும் என்று ஈ.பி ஆர்.எல்.எவ் வரதரணியின் யாழ் பிராந்திய அமைப்பாளர் த.சுபத்திரன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அச்செய்திக் குறிப்பில் சுபத்திரன் மேலும் தெரிவித்திருப்பதாவது, கிருஷாந்தி, கோணேஸ்வரி, சாரதாம்பாள் மன்னார் பள்ளிமுனை கமாலிடா பாலியல்பலாத்காரபடுகொலைகள், நீர்கொழும்பு பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு அங்கு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி தற்போதுஉயர் நீதி மன்றத்தில்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பாலியல் வல்லுறவு இடம் பெறவில்லை

### அமைச்சர் அனுருத்த

[கொழும்பு]

மன்னாரில் இடம்பெற்றதாக கூறப்படும் இரு பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை இதனை வைத்திய பரிசோதனை அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு பிரேரணையை முடித்து வைத்துப் பேசும் போது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனால் ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

மன்னார் பாலியல் வன்முறைச் சம்பவம் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் முறையிட்டதை அடுத்து இது தொடர்பாக விசாரணைகள மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது இத்தகைய துரதிஷ்டமான சம்பவம் மன்னாரில் நடைபெற்றிருந்தால் அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறினார்,(ம)

### பாலியல்வல்லுறவு

## மட்டக்களப்பில் பெண்கள் கறுப்புப்பட்டி போராட்டம்

(மட்டக்களப்பு)

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பு கோதகல்லி மடுவில் 'தடாகம்' பெண்கள் அமைப்பு கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்புப் போராட்டமொன்றை நேற்று நடத்தியது.

நூற்றுக்கணக்கன பெண்கள் இதில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிக் காட்டியுள்ளனர். [ந]

## புத்த விகாரையை மீளவும் கட்ட பிரதமர் உறுதி

(கொழும்பு)

புஞ்சி பொரளைச்சந்தியில் உடைக்கப்பட்ட புத்தவிகாரையைக் கட்டிந்தருவதாக பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா நேற்றுபாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவிப்பதாக உள்ளது என்று கூறி இந்த விகாரையை நகர அபிவிருத்தி அமைச்சு உடைத்தெறிந்தமை தெரிந்ததே.

உடைக்கப்பட்ட இந்த விகாரையை அதே இடத்தில் கட்டித்தருமாறு ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்திய மாதுருவாவேசேபித தேரர் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே. விகாரையைக் கட்டுத்தருவதாக பிரதமர் வாக்குறுதி அளித்துள்ளார். [ஏ]

## வன்னியிலிருந்து 13 அகதிகள் தமிழகத்திற்கு

(சென்னை)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியிலிருந்து 13 அகதிகள் படகொன்றின் மூலம் தனுஸ்கோடி அரிச்சல் பகுதிக்கு வந்துள்ளனரென்று இராமநாதபுரம் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம்.சேத்தாய் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அனைவரும் மண்டபம் அகதிமுகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை தமிழ்நாட்டுத் தோத்லையொட்டிஇலங்கையிலிருந்து இராமநாதபுரம் கடற்பரப்பினூடாக இந்தியாவுக்கு ஆயுதங்கள் கடத்தப்படலாமென்ற அச்சம்காரணமாக இராமநாதபுரம் கடற்கரையோரப் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப் பட்டுள்ளதென்றும் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம்.சேத்தாய் மேலும் தெரிவித்துள்ளார். (இ-05)

## சிறு விளம்பரம்

**ENGLISH CLASSES**

தரம் 1 - O/L, A/L, G.A.Q. B A வரை பாடத்திட்டத்திற்கு அமைய இலகு முறையில் அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது O/L 2001 துரித மீட்டல் பயிற்சி, A/L 2002-2003 வகுப்புகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையினரே சேர்த்துக் கொள்ளப்படுவர். ஆரம்பம் 07. 04 2001 M P, ஷன் ஆசிரியர், பலாலி வீதி, தேவாலய முன் ஒழுங்கை உரும்பிராய்.

[2679]


## ஆலயத்தில் மருத்துவ சேவை

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலயத்தில் கடந்த 29 ஆம் திகதி முதல் இடம் பெற்று வரும் வருடாந்த மஹோற்சவத்தை யொட்டி அடியார்களுக்கு தொண்டர் பணி மருத்துவசேவை என்பவற்றை இலங்கை முதலுதவிச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சாரணர் படைப் பிரிவு: பரியோவான் முதலுதவிச் சங்கம், மானிப்பாய் இந்துக் கல்லூரி மகளிர் கல்லூரி மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை என்பன இணைந்து வழங்கி வருகின்றன. (உ-120)


**BRIGHTMAN**
BROWN ROAD- JAFFNA
யாழ் நகர மாணவர்களுக்காக
**அளவையியல்**
**A/L** 2002 2003
**Vரகுமார்**
பிரிவுகள் II ஆரம்பம்
ஏப்ரல் 07 பி.ப 3 00 மணி
வாரத்தில் ஆகக்குறைந்தது நான்கு வகுப்புகள்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(கி-1730)


## வீடியோ படக்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் அடுத்ததாக கம்போடியாவில் இடம் பெற்ற உள்நாட்டுப்படுகொலைகளை சித்திரிக்கும் ,த.இல்லிங் பீல்ட்ஸ்' எனும் திரைப்படம் நாளை மு.ப.10.00 மணிக்கு புவியியற்றுறைமண்டபத்தில் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## 'சிறுவர்குரல்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யா/மாவட்ட சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழு 'சிறுவர்குரல்' எனும் சிறுவர் செய்தி மடலினை வெளியிடவுள்ளது.

இம்மாத இறுதிக்குள் முதலாவது இதழ் வெளிவரவுள்ளதாகவும், அடுத்து வரும் இதழ்களுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் 'சிறுவர் குரல்', மாவட்ட கண்காணிப்புக்குழு, மாவட்டச் செயலகம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தபால் பெட்டியை திருத்தியமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த மாசிமாத சிவராத்திரி தினத்தன்று விஷமிகளின் கைவரிசைக்கு இலக்கான பொற்பதி வீதி கொக்குவில் பகுதியில் அமைந்திருந்த தபால்பெட்டியை திருத்தியமைக்க உதவுமாறுஅப்பகுதி மக்கள் நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலையத்தை கோரியுள்ளனர். (உ-104)

## இடமாற்றம்

(மந்திகை)

பருத்தித்துறை நகர சபை அலுவலகத்தில் இயங்கிய தொலைபேசி சேவை, அலுவலகத்திற்கு அண்மையில்உள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நகர சபைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-23)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக அனுப்பப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 154090 ஏ | 172015 ஏ |
| 173520 ஏ | 181739 ஏ |
| 181740 ஏ | 182054 ஏ |
| 184463 ஏ | 184548 ஏ |
| 184684 ஏ | 184684 பி |
| 185887 ஏ | 185887 பி |
| 185887 சி | 185887 டி |
| 185887 ஈ | 186022 ஏ |
| 186051 ஏ | 186059 ஏ |
| 186098 ஏ | 186121 ஏ |
| 186192 ஏ | 186194 ஏ |
| 186213 ஏ | 186213 பி |
| 186216 ஏ | 183217 ஏ |
| 183217 பி | 183217 சி |
| 186222 ஏ | 186232 ஏ |
| 186232 பி | 186232 சி |
| 186248 ஏ | 186255 ஏ |
| 186255 பி | 186259 ஏ |

| | |
|---|---|
| 186268 ஏ | 186268 பி |
| 186268 சி | 186268 டி |
| 186268எவ் | 186268 ஜி |
| 186315 ஏ | 188802 ஏ |
| 188803 ஏ | 188816 ஏ |
| 188816 பி | 188816 சி |
| 188816 டி | 188836 ஏ |
| 188838 ஏ | 188849 ஏ |
| 188853 ஏ | 188853 ஏ |
| 188853 சி | 188996 பி |
| 188996 பி | 189031 ஏ |
| 189072 ஏ | 198973 ஏ |
| 198973 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 181850 ஏ | 181850 பி |
| 184536 ஏ | 184536 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 184349 ஏ | 184349 பி |
| 184349 சி | 184349 டி |
| 184349 ஈ | 184418 ஏ |
| 184418 பி | 184418 சி |
| 185875 ஏ | 185875 பி |
| 185933 ஏ | 186221 ஏ |
| 186288 ஏ | 188921 ஏ |
| 188921 பி | |

## பங்குனி உத்தர விழா

[யாழ்ப்பாணம்]

பலாலி ஆசிரியர் கலாசாலை சைவ மாணவர் மன்றம் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் நடாத்தும் பங்குனி உத்தர விழா இன்று மு.ப 10.00 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் திருமதி கோதை நகுலராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில், வரவேற்புரையை சைவ மாணவர் மன்றத்தலைவர் செ. ஜெயகாந்தனும் ஆசியுரையை பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் கு சதாசிவ மூர்த்தியும், சிறப்புரையை முன்னாள் கலாசாலை அதிபர் சோ:பத்மநாதனும் நிகழ்த்தவுள்ளனர். (உ)


காரைநகர்

# வியாவில் ஐயனார் கோவில்

சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்தி விநாயகர் பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேகமும்

விக்கிரம வருடம் பங்குனி மாதம் 26ம் நாள் (08 - 04 - 2001) ஞாயிற்றுக் கிழமை நிகழும் மகாகும்பாபிஷேகத்தை அடுத்து முற்பகல் 9-00 மணிக்கு சமய பெருவிழா நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அதனைத் தொடர்ந்து இரவு

## விழா நிகழ்வு ஒழுங்கு

ஆசியுரை:
- ✶ நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சரிய சுவாமிகள்
- ★ கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான குருமணி பிரம்மஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள்
- ✶ பிரம்மஸ்ரீ மகாவித்வான், கலாபூசணம், கலாரத்தினம் ந. வீரமணிஐயர் ( M.A )

சிறப்புரை: அ. சண்முகதாஸ் பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்

சொற்பொழிவு: கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
வருகை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்
கலாநிதி எஸ். சிவலிங்கராஜா
தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்
திரு. து. வைத்திலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம்
திரு. மு. திருநாவுக்கரசு
ஓய்வுபெற்ற யாழ்மாவட்ட நீதிபதி
திரு. S.A.E. ஏகநாதன்
மாவட்ட நீதிபதி - பருத்தித்துறை
ந. மு. வி. நவரத்தினம்
முதுநிலை விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக் கல்லூரி
திரு. ப. விக்கினேஸ்வரன்
கல்விப்பணிப்பாளர் - தீவகம்
கவிஞர் சோ. பத்மநாதன்

வில்லுப்பாட்டு: அச்சுவேலி சின்னமணிக் குழுவினர்
**'அருணகிரிநாதர் வரலாறு'**
வில்லிசைக்கப்படும்

பட்டிமன்றம்: நடுவர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல்
பொருள்
"பெண்மை ஆற்றல் பெரிதும் வெளிப்பட்டது"
சீதையிடமா? பாஞ்சாலியிடமா? கண்ணகியிடமா?

நாதஸ்வர இசை:
- ★ நாதஸ்வர வித்துவான் கலாசூரி N.K பத்மநாதன் குழுவினர்
- ★ விஷேட தவில்: K.நித்தியானந்தன்
- ● தவில் வித்துவான் R. முருகானந்தன்
- ● நாதஸ்வர வித்துவான் S. சிவதாசன்

ஒலி, ஒளி அமைப்பு: மனோ லைற், கோப்பாய்

நண்பகல் மகேஸ்வர பூசை நடைபெறும்
ஐயனார் அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வியாவில்,
காரைநகர்: ஆலயபரிபாலகர்.

விளம்பர அன்பளிப்பு:
[KT]
**கிருஷிகா ஆடையகம்**
69A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.
(கி/1751)



நெஞ்சை விட்டகலாத
## ஓராண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 | 19 |
| 11 | 03 |
| 1941 | 2000 |

அமரர்
**நமசிவாயம் நடராஜா**
(லிங்கம்)
திதி: 06.04.2001

பூவிழந்து பொட்டிழந்து பொற்தாலி தானும்இழந்து
தக்கதுணை தானும் இன்றி தனிமையிலே நாம் வாழ
ஆண்டொன்று ஆகினதே ஆறவில்லையே எம் துயரம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!!

3 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.
(2696)

# செய்தித் துளிகள்

## இருமாடிக் கட்டடம் திறந்து வைப்பு

(சங்கானை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட இரு மாடிக் கட்டடம் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ச. இராமலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இத் திறப்பு விழா நிகழ்வில், யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன், வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(21-உ

## ஆட்சிக்குழு தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் ஈச்சமோட்டையில் உள்ள உதைபந்தாட்டமத்தியஸ்தர்சங்கப் பணிமனையில் அதன் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தலைமையில் நடைபெற்றபோது,இடம்பெற்ற ஆட்சிக் குழுத் தெரிவில் கீழ்க்காண்டோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். ரி. கணநாதன்,உபதலைவர்கள் கப்டின் டி.எ எம்.குணசிங்கம் எஸ் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை,பி.ஜேக்கப், எ.தர்மராஜா, எம்.பேட்டி பனிஸ்ரர் செயலாளர் எம்.பிரான்சிஸ், உபசெயலாளர் வி நிர்மலன் பொருளாளர் பசில் விஜராஜ்ஜன். (உ-110)

## நீர்ப்பம்பி பழுது

(மல்லாகம்)

சுன்னாகம் சந்தி, பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு அருகேயுள்ள நீர்ப்பம்பி பழுதடைந்து காணப்படுகிறது.

இந் நீர்ப்பம்பி பழுதடைந்துள்ளமையால்,அதனை நம்பி நீர் பெற்று வந்தவர்கள் வேறிடம் சென்று குடிநீர் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதிகரித்த பாவனை காரணமாகவே இப்பம்பி பழுதடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-122)

## செயலாளர் நியமனம்

[மண்டைதீவு]

தீவுப்பகுதி தெற்கு பிரதேச சபையின் செயலாளராக எம்.சி குலசிங்கம் நியமனம் பெற்றுள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையில் கடமையாற்றிவந்த இவர் இந்த மாதம் தொடக்கம் தீவுப்பகுதி தெற்கு பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். [உ-11]

## அபி.திட்டங்களில் விபரங்கள் சேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யா/மாவட்டக்கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் 2001 ஆம் ஆண்டுக்கான நுண்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் பிரதேச செயலகங்களின் கீழ் இயங்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் முன்னேற்றச் சங்கங்கள் என்பவற்றின் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான விபரங்களை முன்னுரிமை அடிப்படையில் வகைப்படுத்தி இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு யா/மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (உ-6)

## அபிஷேக ஆராதனை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி ஸ்ரீசர்வமங்கள இராஜேஸ்வரி அம்பாள் கோயிலில் பௌர்ணமி தினமான நாளை சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு அபிஷேகத்துடன் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று சுவாமி வீதி உலா இடம்பெறும். (உ)

## வருடாந்த குளிர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் உள்ள காளியம்மன் ஆலய வருடாந்த குளிர்த்தி இன்று இடம்பெறவுள்ளது. (உ-10)

## திருத்தாண்டக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கைத் திருமுறை மன்றத்தினரால் இன்று காலை 6.00மணிக்கு 'திருத்தாண்டக முற்றோதல்' நிகழ்வு மன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நல்லூர் கந்தசுவாமி ஆலய தேரடி அறுபத்து மூன்று நாயன்மார் மடத்தில் நடைபெறவுள்ளது (செ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு, யாழ். கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளது.(செ)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர்வீதி பாணன் குளம் நாச்சியம்மன் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை இரதோற்சவமும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (செ)

## வெடி விபத்தில் உயிரிழந்தோர்

[வவுனியா]

விடுதலைப் புலிகளின் படகில் கடந்த 29ம் திகதி இடம்பெற்ற வெடிவிபத்தின்போது தமது தரப்பில் மூவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தோர் விபரம் வருமாறு;மேஜர் காந்தன் [சகாதேவன் சுதாகரன்மணலாறு, கப்டன் வாகைசூடி [மரியநாயகம்பிலிப்ஸ்றீபன் யாழ்ப்பாணம்] ஆகிய கடற்புலிகளும்,குலதீபன் குலேந்திரன் மட்டக்களப்பு என்ற போராளியுமே உயிரிழந்தோர் ஆவர். [க-05]

## மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில்கடந்த புதனன்று ஏற்பட்ட கோஸ்ரி மோதல் சம்பவத்தில் தலையில் காயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.அனுமதிக்கப்பட்டவர்களில் யுவதி ஒருவர் அடங்குவார். [உ-6]

## பேயாதின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில், நாளை காலை 9.00 மணிமுதல் பேயாதின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இலட்சார்ச்சனை, பண்ணிசை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு நாராயண சேவை என்பன அன்றைய தினம் இடம்பெறும்.(உ-104

பல வருடங்களின் பின்

# பழுதடைந்த நிலையில் யாழ் வந்த சத்திரசிகிச்சை நிலையக்குளிரூட்டி

[யாழ்ப்பாணம்]

யா.போதனா வைத்தியசாலைக்கென பிரிட்டிஷ் அரசினால் கடந்த 94ஆம் ஆண்டு அன்டளிப்புச் செய்யப்பட்ட சத்திர சிகிச்சை நிலையத்திற்கான குளிரூட்டி பழுதடைந்த நிலையில் நேற்று முன்தினம் மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

கடந்த 7 வருடங்களுக்கு முன் அன்பளிப்புச் செய்யப்பட்ட மேற்படி உபகரணம் இதுவரை காலமும் கொழும்புத்துறைமுகத்தில் பாதுகாப்பு காரணங்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பழுதுபட்ட நிலையில் காணப்படும் இக் குளிரூட்டியினைப் பழுது பார்த்து ஏற்றவாறு பொருத்தும்நடவடிக்கைகள் பொறியியலாளர்கள் வந்தவுடன் ஆரம்பமாகும் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க, குளிரூட்டியுடன் அன்பளிப்புச் செய்யப்பட்ட மேலும் சில வைத்திய உபகரணங்கள் தொடர்ந்தும் கொழும்பிலேயே காத்திருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-10)

## ஸ்ரீராம பட்டாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் இடம் பெறவுள்ளது.(உ-10)

## இராசி பலன்

6.4.2001
(பங்குனி 24, வெள்ளி)
திரயோதசி பி.ப 1.16 வரை
பூரம் மு.ப 9.43 வரை
இராகுகாலம் 10.38- 12.08
சுபநேரம் 6.08- 7.38
சித்தம், பங்குனி உத்தரம்.

**மேடம்**
காரியத் தடங்கல், தாழ்வு நிலை, மனக்கவலை, எதிர்பாராத நன்மை.

**இடபம்**
உறவினர் மனஸ்தாபம், மதிப்புக் குறைவு, முயற்சி தாமதம்,வேண்டாத உறவு.

**மிதுனம்**
செல்வாக்கு, சகோதரர் உதவி, வாக்குப் பலிதம், முயற்சி வெற்றி.

**கடகம்**
காரிய தாமதம், பொருள் விரயம், விவாதம், மனச்சஞ்சலம்.

**சிங்கம்**
தெய்வ தரிசனம், பெரியோர் ஆசி, போசன சுகம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
மனக்கிலேசம், பிதா சிந்தை, ரோகம், காரிய அலைச்சல்.

**துலாம்**
முயற்சி கைகூடும், தெய்வ சிந்தை, பொருள் வரவு, கௌரவம்.

**விருச்சிகம்**
உத்தியோக நன்மை, அதிகாரம், சுப நிகழ்ச்சி, பிறர் உதவி.

**தனுசு**
கட்டுப்பாடு, ஆன்றோர் ஆசி, அச்சமான நிலை,உடல் உபாதை.

**மகரம்**
எதிர்பாராத பிரச்சினை, வீண் தொல்லை, திடீர் நன்மை, முயற்சி தடங்கல்.

**கும்பம்**
தெய்வ தரிசனம், முயற்சி ஜெயம், வாகன வசதி, திடீர் பயணம்.

**மீனம்**
புதிய முயற்சி, தனவரவு, உஷ்ண நிலை,காரிய நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய தீர்த்த உற்சவத்தை ஒட்டிய

## பாமலர்

### தீர்த்தக் கரையினிலே...

வண்ணை வைத்தீஸ்வரர் சேணியிலே- இன்று
தீர்த்தமாடும் நீற்று மேனியனே!

போற்றுகின்றோம் உமை போற்றி போற்றி-எங்கள்
இதயம் தனில் உமை ஏற்றி ஏற்றி!

தீர்த்தக் கரையினில் நீங்கள் எழ- எம்
கண்கள் பனிக்குதக் காட்சி தொழ!

இன்பனே, இனியனே, இறைவனே பார் எம்
வாழ்வினில் இன்பத்தை வந்திங்கு சேர்!

ரீ ரீ. மயூரன்

## திருடர் செயலை முறியடிக்க பொலிஸ் அதிகாரி ஆலோசனை

(மந்திகை)

பெறுமதி வாய்ந்த பொருட்கள்,நகைகள், பணம் என்பனவற்றை வீடுகளில் பாதுகாப்பான இடங்களில் வைக்குமாறு பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்ட மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக பருத்தித்துறைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன வீடுகளின் பாதுகாப்பினை உரிய முறையில் உறுதிப்படுத்தாமையினால் திருடர்கள் வீடுகளுக்குள் நுழைந்து பொருட்கள் பணம் நகைகளை எடுத்துச் செல்ல வாய்ப்பாகவுள்ளது எனவே பெறுமதி வாய்ந்த நகைகள் பணங்களை பாதுகாப்பான இடங்களில் வைப்பதன் மூலம் திருடர்களின் முயற்சியை முறியடிக்க முடியும் எனவும் துவிச்சக்கரவண்டிகளை வெளியில் விடாது அவற்றை பாதுகாப்பாகப் பூட்டி வைக்குமாறும் மேலும் பொலிஸ் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். [உ-23]

## யாழ்.குடாநாட்டில் மின் விநியோகம் இன்னமும் சீரில்லை

### மகேஸ்வரன்எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்னமும் சீரான மின் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லையென ஐ.தே கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவு திட்டம் மீதானகுழுநிலைவிவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; 7 ஜெனரேற்றர்கள் யாழ்ப்பாண மின்சார சபைக்கு அன்பளிப்பாக கிடைத்துள்ளன. அவற்றில் நான்கு படையினரின் பயன்பாட்டில் உள்ளன.

முக்கியமான வேளைகளில் மின் தடை ஏற்படுவதால் பாவனையாளர் பெரிதும் சிரமமுறுகின்றனர்.

இது விடயம் தொடர்பாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

கொழும்பில் 50 ரூபாவாக விற்கப்படும் பெற்றோல் யாழ்ப்பாணத்தில் 70 ரூபாவாக விற்கப்படுவதாகவும் அவர்மேலும் பிரஸ்தாபித்துள்ளார். (க-4)

நேர்த்திக்கடன் செலுத்தியவர்

## தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

[மந்திகை]

நேர்த்திக்கடனுக்காக கோவிலில்உணவுசமைத்துக் கொண்டிருந்த சமயம் ஏற்பட்ட தீவிபத்தில் எரிகாயங்களுக்குள்ளான ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுட்டிபுரம் அயயன் கோவில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொடிகாமம் தவசி குளத்தை சேர்ந்த செல்லக்கண்டு ஜெமிலிஸ்வரன் [வயது18] என்பவரே தீக்காயங்களுக்கு உள்ளானவராவார். [உ-23]

# உயர்தர மாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல- 51 தொகுப்பு: ரீ. மயூரன்

### பொது உளச்சார்பு

★ பின்வரும் 5 சொற்களில் பொருந்த மற்றதன் கீழ் கீறிடுக.

01) சூரியன், நட்சத்திரம், மின்மினி, சந்திரன், மேகம்
02) kg g. றாத்தல், தொன், L
03) கதிரை, முதிரை, மதுரை, குதிரை, பதிரை
04) KuLam, Pulam, Dolam, Colum, Thalam
05) 52, 84, 68, 79, 78

★ பின்வரும் வினாக்களுக்கு தரப்பட்ட முதலிரு சொற்களின் ஒற்றுமையை கண்டு அடுத்துவரும் சொல்லுக்கு பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவு செய்க.

06) தண்ணீர்: பரப்பளவு, ஏக்கர்: (பரப்பளவு, நிலம் தென்னை, கடல்)
07) எலி: முலையூட்டி, புடையன்: (மீன், ஊனுண்ணி, ஊர்வன, நஞ்சுள்ளது)
08) தேனி: தேனகூடு, யானை: (கூட்டம், தொகுதி, திரள், தொகை)
09) பால்: தயிர், நீர் (வெண்ணெய், உறைபனி, நீராவி, திரவம்)
10) உப்பு: கடல், இரத்தினக்கல் (ஆபரணம், சுரங்கம், கல், குண்டூசி)

★ பின்வரும் வினாக்களில் உள்ள எண் தொடர் ஓர் ஒற்றுமையில் தரப்பட்டுள்ளது. அடுத்துவரும் எண்ணைக் கண்டுபிடிக்க.

11) 48, 46, 44, 42, 40, — ——
12) 51, 45, 39, 33, 37, ————
13) $\frac{1}{32}$, $\frac{1}{16}$, $\frac{1}{8}$, $\frac{1}{4}$, $\frac{1}{2}$, ————
14) 25, 5, 16, 4, 9, ————
15) 1, 0.1, 0.01, 0.001, 0.0001, ————

★ பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

16) என்னிடம் உள்ள பணத்தின் நான்கு மடங்குடன் 4 ரூபாவைக் கூட்டுவேனாயின், அது உன்னிடமுள்ள 60 ரூபாவுக்கு சமனாயின் என்னிடமுள்ள பணம் எவ்வளவு?
17) ஒரு சதுரத்தைச் சுற்றிவரக் கம்பங்கள் நடப்பட்டன ஒருபக்கத்தில் 16 கம்பங்கள் இருப்பின் எல்லாமாக எத்தனை கம்பம் இருக்கும்?
18) ஒரு பூப்பாத்தியில் முதலில் ஒரு ரோஜாச் செடியும் அடுத்து ஒரு செவ்வந்திச் செடியும் மாறிமாறி நடப்படுகின்றன. அப்பாத்தியில் 11 செடிகள் இருப்பின் செவ்வந்திச் செடிகள் எத்தனை?

★ விந்தன், நிமலன், அமிர்தன், ஆகிய ஒவ்வொருவரிடமும் ஒரு மோட்டார் சைக்கிள் உண்டு. பெயரில் ஒருமெய் எழுத்தை உடையவரிடம் சைக்கிள் உண்டாயின்.

19) மோட்டார் சைக்கிள் மட்டும் உடையவர் யார் யார்?
20) சைக்கிள் வைத்திருப்பவர் யார்?

### பொது அறிவு

★ பின்வருவன நடைபெற்ற ஆண்டைத் தருக.

21) சீனா குடியரசானது — — — —
22) அமெரிக்க ஜனாதிபதி கெனடி சுடப்பட்டது
23) ஜவஹர்லால் நேரு இறந்தது
24) சீனப் பெருஞ்சுவர் கட்டப்பட்டது
25) அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது

★ 26 - 30வரையான வினாக்களுக்குத் தரப்பட்ட 4 விடைகளுள் ஒன்றைத் தெரிவு செய்க.

26) கடற்கோட்டை எங்குள்ளது?
1) கொழும்பு- கோட்டை 2) மன்னார்
3) ஊர்காவற்றுறை 4) மட்டக்களப்பு

27) இலங்கையை ஆட்சி செய்த முதல் அரசி யார்?
1) குபேரி 2) அனுலா
3) பத்தகச்சானா 4) காமினி

28) கடல் மட்டத்திற்குக் கீழே உள்ள நாடு எது?
1) நெதர்லாந்து 2) போலாந்து
3) யப்பான் 4) பிலிப்பைன்ஸ்

29) மிகத் தடித்த தோலுள்ள பிராணி எது?
1) யானை 2) திமிங்கிலம்
3) ஒட்டகம் 4) கரடி

30) 1936 இல் ஒலிம்பிக் எங்கு நடைபெற்றது?
1) பேர்லின் 2 லண்டன்
3) ரோம் 4) மெக்ஸிக்கோ

★ பின்வரும் நாடுகளின் தலைநகரங்களைத் தருக.

31) சீனா — — — —
32) இஸ்ரேல் — — — —
33) கனடா — — — —
34) இந்தோனேஷியா — — — —
35) கிறீஸ் — — — —

★ பின்வரும் கண்டு பிடிப்புக்களை நிகழ்த்தியவர்களின் பெயர்களைத் தருக.

36) ஒலிப்பதிவுத் தட்டு — — — —
37) விசர் நாய்க்கடி மருந்து — — — —
38) அணுக்கொள்கை — — — —
39) மின் மணி — — — —
40) எந்திரத் துப்பாக்கி — — — —

**குறிப்பு:-**

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 12-04-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## பன்றிகளால் தொல்லை

(கல்வயல்)

காட்டுப் பன்றிகள் பெருக்கத்தால் கொடிகாமம், அல்லாரை, வரணி, குடவத்தைப் பகுதிகளில் விவசாயிகளுக்கும், குடியிருப்பாளர்களுக்கும் பெரும் தொல்லை ஏற்பட்டு வருகிறது. (உ 111)

## அறிவியல் வினா இல-50 விடைகள்

1) mm
2) கிழமை
3) EARI
4) நான்கு
5) இடி
6) வெப்பம்
7) மரம்
8) திரவம்
9) 378
10) மறியற்சாலை
11) 9
12) 54
13) 24
14) 14
15) 31
16) உ
17) அழகன்
18) அமுதன்
19) அகிலன்
20) அமுதன்
21) மணிலா
22) இஸ்தான்புல்
23) கன்பரா
24) பீக்கிங்
25) டோக்கியோ
26) 6693 Km
27) இராசப்ப கலிங்கராயர்
28) கி. பி. 1492
29) தென்னாபிரிக்கா
30) சீனா
31) கே. பிரக்பி மில்லன்
32) எலிசா ஜி ஓடிஸ்
33) பெஞ்சமின் பிராங்லின்
34) சாள்ஸ் வபேஜ்
35) வோல்ற்ரா
36) பல்லவி
37) 40
38) கழுகு
29) 1900
40) ஜேமிஸ் நாய்ஸ்மித்

## அறிவியல் வினா - 50

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் விபரம்

★ சிவகுமாரன் சயந்தன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
★ ஆ. விமலினி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
★ தமிழ்ச் செல்வி விசுவகேது யாழ். யூனியன் கல்லூரி
★ த கிருஷாந்தி 41/1 அரச வீதி நல்லூர்
★ எஸ் அனோமினி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
★ எ. ரீ. அனோல்ட் பரியோவான் கல்லூரி
★ ரீ. கௌசி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

## அறிவியல் பகுதி வினா இல-51

"வலம்புரி"

இல: 15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ............................

சொந்த முகவரி: ............................

கற்கும் பாடசாலை: ............................

மாணவர் கையொப்பம்: ............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## இனப்பிரச்சினையை தீர்க்க வெளிநாட்டினரை அனுமதிக்கக் கூடாது

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளை நாடினால் நாம் அடிமைத்தளையிலிருந்து விடுபட முடியாது.

இவ்வாறு ஜே.வி.பி. கட்சி உறுப்பினர் நந்தன குணதிலக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எமது உள்நாட்டுப் பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடத் தேவையில்லை.

இனப்பிரச்சினையைத்தீர்ப்பதற்கு நாம் அமெரிக்கா, நோர்வே, பிரித்தானியா ஆகிய நாடுகளின் உதவிகளை நாடினால் நாம் அடிமைத்தளையிலிருந்து விடுபட முடியாது.

எமது பிரச்சினையைத் தீர்க்கும் உரிமையை வெளிநாட்டினருக்கு வழங்கி விட்டால், எம்மால் எதையும் செய்ய முடியாது.

என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். [செ]

## கரவெட்டிப் பகுதியில் திருட்டுசம்பவங்கள்குறைவு

(பந்திகை)

கரவெட்டிப் பகுதியில் விழிப்புக்குழுக்கள் அமைத்துச் செயற்பட ஆரம்பித்ததன் பின்னர் அங்கு திருட்டுச் சம்பவங்கள் வெகுவாக குறைந்திருப்பதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர மேற்படி குழுக்கள் சட்ட பூர்வமற்ற மின் பாவனையாளர் மற்றும் கசிப்பு உற்பத்தியாளர் விடயத்தில் கடும் போக்கை கடைப்பிடித்து வருவதையடுத்து அச்செயற்பாடுகளும் குறைவடைந்து வருவதாக கூறப்படுகிறது. (உ-23)

## ரஷ்யா - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

[கொழும்பு]

இலங்கையும் ரஷ்யாவும் இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்தும்வகையில் பாதுகாப்பு உடன் படிக்கை ஒன்றில்கைச்சாத்திடவுள்ளன.

பாதுகாப்பு விவகாரங்களில் இரு நாடுகளும் தமக்கிடையே ஒத்துழைப்பை மேம் படுத்தும் நோக்கில் இணைந்து செயல்பட மேற்படி உடன் படிக்கை வகைசெய்யும்.

இப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின்மூலம் தமிழீழவிடுதலைப் புலிகளின் நடவடிக்கை களை கட்டுப்படுத்தல், ஆட்கனளக் கடத்தலை நிறுத்துதல், மற்றும் போதைப்பொருட் கடத்தலைகட்டுப்படுத்தல் ஆகியன செயற்படுத்தப் படவுள்ளன.

கொழும்பில் உள்ள பாதுகாப்பமைச்சகத்தில் நிறைவேற்றப்படவுள்ளபாதுகாப்பு உடன் படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக, விரைவில் ரஷ்ய உளவுப் பிரிவான 'சமஸ்டிப் பாதுகாப்பு சேவை' [எவ் எஸ் எஸ்]யின் தலைவர் கேணல் ஜெனரல் நிக்கலோ பற்றுசெவ் கொழும்பு வரவுள்ளார். (இ)

## சர்வோதய இயக்கத்தினால் முன்பள்ளிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வோதய இயக்கத்தினால் யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கும் முன்பள்ளிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் தற்போது விபரங்கள் திரட்டும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

தற்போது திரட்டப்பட்ட தகவல்கள் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 10 முன் பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு சர்வோதய இயக்கத் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இவற்றின் புனரமைப்புக்கென ஒவ்வொன்றுக்கும் 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும்,

புனரமைக்கும் பணிகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

(உ-6)

## ப.நோ.கூ. சங்கம் இல்லாத மணற்காடு

(செம்பியன்பற்று)

மணற்காட்டுப் பகுதியில் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் இயங்காமையால், அப்பகுதி மக்கள் பொருட்களைப் பெறுவதற்குப் பெருஞ்சிரமப் பட்டு வருகின்றனர்.

இதேவேளை, வேறிடங்களுக்குச் சென்று பொருட் கொள்வனவில் ஈடுபட ஏற்ற போக்குவரத்து வசதி இப்பகுதியில் இல்லாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-42]

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர் வரும் புதுவருடப் பிறப்பு அன்று இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது (உ-104)

## வீதி திருத்தம்

(சங்கானை)

வலி தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு முல்லையடி வீதி திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. (உ-123)

## இன்று ஒரு தகவல்

# சொல்லும் முறை உண்டு

முரளீதரன் என்ற மன்னன் இசையைப் பயின்று பலருக்கும் பாடிக்காண்பிக்க ஆரம்பித்தான். அவனது பாட்டை அதிகாரிகளும், அமைச்சர்களும் கேட்டேயாகவேண்டியதாயிற்று. அதனால் அவர்களால் தம்கடமைகளைச் சரிவரச் செய்ய முடியவில்லை. அரசாங்க வேலைகள் நின்று போயின. இதனை மன்னனுக்கு எப்படிஎடுத்துச்சொல்வது என்று தெரியாமல் அவர்கள் திகைத்தார்கள். அந்தமன்னனின் ஆஸ்தான விகடகவி நாசராஜன், சில நாட்கள் மணிக்கணக்கில் மன்னன் பாடக் கேட்டு அவஸ்தைப் பட்ட சிலருள் அவனும் ஒருவன். ஒரு நாள் மன்னன் பாடியதைக் கேட்ட பின் அவன் 'அரசே! பிரமாதம்' என்றான் மன்னனும் 'என் குரலில் இனிமையும் வசீகரசக்தியும் உள்ளன. அதனால் தான் யாரும் நான் பாடும் போது எழுந்து போவதில்லை, இருக்கிறார்கள்' என்றான்.

விகடகவியும் 'நீங்கள்பாடும் போது எழுந்து செல்ல எவனுக்குத் தைரியம் வரும்? என்றான். பதிலுக்கு அதைக் கேட்ட மன்னன் விகடகவி பொடிவைத்துப் பேசுகிறான் எனத் தெரிந்து கொண்டுவிட்டான். ஆனால் கோபப்படாமல் புன்னகை புரிந்து' அவன் 'ஆம் என் பாட்டைக் கேட்பவர்களில் ஒரு சிலர் எனக்குப் பயந்தும், வேறு சிலர் என் தயவைப் பெற வேண்டும் என்பதற்காகவும், உட்கார்ந்தே இருப்பார்கள். இதனை இப்போது தான் உணர்ந்தேன்' என்றான். விகடகவி 'ஓ! நான் சொன்னதால் தங்களுக்குக் கோபம் வந்து விட்டதா' என்று கேட்டான். மன்னனும் 'இல்லை! நீ எனக்கு ஒரு உண்மையைப் புலப்படுத்தியதற்கு நன்றி. ஆனால் சட்டென நான் பாடுவதை நிறுத்தி யாரும் என் பாட்டைக்கேட்க வராதீர்கள் எனக் கட்டளையிட்டால் அவர்கள் வேறு விதமாகச் சந்தேகப்படுவார்களே! இவ்வளவு நாட்களாக என் இசையில் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டது என நான் சொல்வதும் எனக்கு அவமானம். இதிலிருந்து விடுபட என்ன வழி?' என்று கேட்டான்.

விகடகவியும் 'அரசே! எந்த விஷயத்தையும் சொல்லும் முறையென்று ஒன்று உள்ளது. நான் எனது முறையில் தங்களுக்கு இந்த விஷயத்தை உணர்த்தினேன். இது போல் நீங்களும் உங்கள் அந்தஸ்து தாளாமல் உங்கள் பாட்டைக் கேட்க வருபவர்களைத் தடுத்து நிறுத்த முடியும். நீங்களே யோசித்தால் உங்களுக்கே ஒரு வழி தெரிந்து விடும்' என்றான். மறு நாள் மன்னன் பாட ஆரம்பித்த போது சில அதிகாரிகள் கேட்க வரவே மன்னன் அவர்களைப் பார்த்துக் கோபமாக 'நீங்கள் செய்வது எனக்குச் சற்றும் பிடிக்க வில்லை. நான் சங்கீத சாதகம் செய்யவிரும்புகிறேன். அதற்குத்தனிமையில் தான் நான் சாதகம் செய்ய முடியும் என்ற சின்ன விஷயம் உங்கள் அறிவில் படவில்லையா? நான் பாட ஆரம்பித்ததுமே ஓடி வந்து என்னைச் சூழ்ந்து கொள்கிறீர்களே. இனிமேல் உங்கள் வேலைகளை விட்டு என் பாடலைக் கேட்க வந்தால் தண்டனை தான் கிடைக்கும்' என்றான்.

மன்னனே இவ்வாறு தன் பாட்டைக் கேட்கயாரும் வர வேண்டியதில்லை எனக் கூறியது எல்லா அதிகாரிகளுக்கும் மகிழ்ச்சியையே அளித்தது. ஆனால் மன்னன் மனம் ஏன் திடீரென மாறியது என்பது தான் அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது.

முகவை இராமலிங்கம்

## விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் இவ்வருடம்

# 698 விவசாயகுளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் யா/மாவட்டத்தில் உள்ள 964 குளங்களில் இவ்வருடம் 698 விவசாய குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களான கெயர், பட்டினிக்கு எதிரான நிறுவனம். போரூட், உலக உணவுத்திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் மாகாண சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியில் இருந்தும். கமநல நிதியில் இருந்தும் இக் குளங்கள் புனரமைப்பு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விவசாய உற்பத்தியினை ஊக்குவித்து சிறுபோக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் வகையிலான இக் குளங்கள் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் தற்போது கெயர்நிறுவனத்தினால் தீவகப் பகுதியில் 10 விவசாயக் குளங்களு, பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் 4 குளங்களும், உலக உணவுத்திட்டத்தினால் 18 குளங்களும், வடக்கு கிழக்கு மாகாண சபையினால் 2 குளங்களும், காரைநகர் கமநல நிலையத்தினால் 6 குளங்களும் புனரமைக்கப் பட்டு வருகின்றன (உ-6)

## சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பகுதியில்அண்மையில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போதுகுண்டொன்றை வெடிக்க வைத்து உயிரிழந்ததாகக் கருதப்படும் இளைஞனின் சடலமொன்று நேற்று முன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடாக் கடலூடாக சடலம் எடுத்துச் செல்லப்பட்டு, பூநகரி கௌதாரிமுனையில் வைத்து, புலிகளிடம் சடலம் கையளிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ- 43)

## நல்லின உள்ளூர் விதை உற்பத்திக்கு கூட்டுறவு சங்கம் அமைப்பு

(யாழ்ப்பாணம)

நல்லின உள்ளூர் விதை உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்கோடு ''விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம்'' அமைப்பதென கடந்த 30 ஆம் திகதி செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற நல்லின விதை உற்பத்தி தொடர்பான கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அன்றைய தினம் எடுக்கப்பட்ட வேறு சில தீர்மானங்கள் வருமாறு,

மேற்படி சங்கத்தில் சகல கமநல கேந்திர நிலையக் குழுக்களையும் அங்கத்தவராக்கிக் கொள்ளுதல்,

இவ்வாறு நியமனம் பெறும் 13 கமநல கேந்திர நிலையங்களும் விதை உற்பத்தியில் திறமையும் தேர்ச்சியும் அனுபவமும் கொண்ட இருவரை தங்கள் நிலையத்தில் இருந்து தெரிவு செய்து இச் சங்கத்திற்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சுடன் அனுப்பி வைத்தல் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன (உ-6)

## இடர்காலக் கொடுப்பனவு

(இணுவில்)

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளில் 1998-1999 காலப் பகுதிகளில் ஆசிரிய மாணவர் களாக இருந்து தற்போது பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களது 96, 97, 98, காலப் பகுதிகளுக்குரியஇடர் காலக் கொடுப்பனவுக் காசோலை யாழ்.வலயக்கல்விப்பணிமனையில் வைத்து வழங்கப் படுகின்றது. (உ-49)

## மோட்டார் சைக்கிள் பதிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் பதிவுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மோட்டார்சைக்கிள் பதிவு, இலக்கத்தகடு விநியோகம் வழங்கும் பணிகள் எதிர் வரும் 9 ஆம் திகதி திங்கட் கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உழவு இயந்திரங்களின் செசி இலக்கம், எஞ்சின் இலக்கம் இடும் பணியும் இடம்பெறவுள்ளதால் கொழும்பு திணைக்கள அலுவலகத்திற்கு அனுப்பி இலக்கத் தகடைப் பெற முடியும என அறிவிக்கப் பட்டுள்ளது.

(உ-10)

## சிறுதானிய செய்கை

[மல்லாகம்]

கந்தரோடைப் பகுதி நெல் வயல்களில் தற்போது, பயறு, உழுந்து போன்றன பெருவாரியாக செய்கை பண்ணப் பட்டுவருகின்றன.

சில வயல்களில்சணல்விதைக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. [உ-122]

## பருத்தித்துறைப் பகுதியில் போலி [ஆ]சாமிகைவரிசை

(கல்வயல்)

சாமியார் வேடமிட்டுச் சென்றவர் வீட்டில் தனித்திருந்த பெண்ணிடம் பசப்பு வார்த்தைகூறி ஏமாற்றி தங்க நகைகளை அபகரித்துச் சென்ற சம்பவம் அண்மையில் பருத்தித்துறைகலட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி போலிச் சாமியார் சம்பந்தப்பட்ட வீட்டுக்குச் சென்று அவ் வீட்டில் நடந்து முடிந்த சில சம்பவங்கள் சிலவற்றைக் கூறி நப்ப வைத்து இனிவரும் காலங்களில் துன்பங்கள் நேராதிருக்க சில சடங்குகள் செய்வதாகக்கூறி தந்திரமாக அப் பெண்ணிடமிருந்து சங்கிலி, மோதிரம் போன்ற தங்க நகைகளை அபேஸ் செய்து கொண்டு மறைந்து விட்டாராம். (உ-111)

## ஆலயத்தின் பெயரால் பணம் சேர்த்தவரை தேடி வலைவிரிப்பு

(ஈச்சமோட்டை)

சங்கரத்தை பத்திரகாளி கோவிலின் வருடாந்த உற்சவத்திற்கு பணம் சேர்ப்பதாக பொய்கூறி வர்த்தகர்களிடமும், பொதுமக்களிடமும் பணம் சேகரித்து மோசடி புரிந்து வந்த நபரை ஊர் மக்கள் தேடிவருகின்றனர்.

இந் நபர் ஆலயத்தின் பெயரால், சுமார் 5 ஆயிரம் ரூபா வரை பொதுமக்களிடம் பெற்றிருக்கும் விடயம் வெளிச்சத்திற்கு வந்ததை தொடர்ந்து தலைமறைவாகி யிருப்பதாகவும்,

சம்பந்தப்பட்ட பகுதி மக்களும், அப்பகுதி இந்து வாலிபர் சங்கமும் இணைந்து இவரைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அறிய முடிகிறது. (உ-59)

## வெங்காய விலை அதிகரிப்பு

(கல்வயல்)

சுன்னாகம், மருதனார் மடம் சந்தைகளில் வெங்காயத்தின்விலை உயர்வடைந்து காணப்படுகிறது.

வெங்காய அறுவடை இடம் பெற்று வருகின்ற போதிலும் அதன் விலையில் வீழ்ச்சி ஏற்படாமை குறிப்பிடத்தக்கது.

(உ-111)

## அ. அட்டையினால் அகப்பட்ட திருடன்

(சங்கானை)

வர்த்தகரைத் தாக்கி சொத்துக்களைப் பறிமுதல் செய்த திருடர் குழுவைச் சேர்ந்த நபர் ஒருவர் தடி பொல்லுகள் மற்றும் மண் கலந்த மிளகாய்த்தூள் சகிதம் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

சங்கானைப் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

அப்பகுதி வர்த்தகர் ஒருவர் இரவு நேரம் கடையைப் பூட்டிவிட்டு வீடு நோக்கிச் சென்ற வேளை, வழிமறித்த திருடர் குழு அவர் வசமிருந்த பணம், கடைத்திறப்பு, பதிவேட்டுப் புத்தகங்கள், காசோலைப் புத்தகங்கள் என்பவற்றைப் பறிமுதல் செய்ததுடன், அவரைத் தாக்க முற்பட்டதாகவும்,

அவ்வேளை அவர்களில் ஒருவரது அடையாள அட்டை நிலத்தில் விழுந்துவிடவே அவர் அதனைத் தேட முற்பட்ட போது பொதுமக்கள் அவரை மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் தெரியவந்துள்ளது. (உ-123)

## 10 ஆயிரம் தொன் யூரியா எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளின் நன்மை கருதி, சஜிந்த கப்பல் மூலம் நேற்று 10ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா எடுத்து வரப் பட்டது.

யாழ். மாவட்ட கமநல கேந்திர நிலையம் ஊடாக பிரதேச கேந்திர நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டு இவை விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும்,

தேவையானவர்கள் தத்தமது பகுதிக் கமநல நிலையங்களூடாக உரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ- 6)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அத்தியடி அருள் மிகு ஸ்ரீசிதம்பரநடராஜா வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன;

[செ]

## புங்கா விருது

[மல்லாகம்]

தெல்லிப்பழை வாசியான திருமதி ஜெயசங்கர் அண்மையில் ஜப்பானிய இலங்கை கலாசார நட்புறவுச் சங்கத்தினால் வழங்கப்படும் 'புங்கா' விருதினைப் பெற்றுக் கொண்டார். [உ-122]

## கச்சேரி நல்லூர் வீதியில் இளவல்களால் குழப்பம்

[அரியாலை]

கச்சேரி நல்லூர் வீதியை அண்டிய பகுதிகளில் அண்மைக் காலமாக இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகிறது.

குழுவாக மோதல்களில் ஈடுபடுவது, இதைத் தடுக்கமுனைவோரிடம் அநாவசிய வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்வது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன;

ஏப்ரல் முட்டாள் தினத்தன்று [இவர்களின் அடாத செயல்கள் மிகவும் எல்லைமீறி இருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(உ-106)

# ஆத்திரம் கொண்ட பயணிகள் ஆறு பேருந்துகளை தீயிட்டனர்

(புதுடில்லி)

டீசல் வாகனங்கள் எவையும் வீதிகளில் பயன்படுத்தக் கூடாது என்ற இந்திய - புதுடில்லி உயர் நீதிமன்றத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து பொதுப் போக்குவரத்துச் சாதனங்கள் சேவையில் ஈடுபடாததால் ஆத்திரமடைந்த பயணிகள் வன்முறையில் ஈடுபட்டதில்.

ஆறு பேருந்துகளும் இரு வர்த்தக நிலையங்களும் பயணிகளால் எரியூட்டப்பட்டன. டில்லியில் வாகனங்களில் இருந்து வெளிவரும் புகைக் கழிவால் சூழல் மாசடைகிறதெனவும் இதனால் வாகனங்கள் டீசல் பாவிப்பதைத் தவிர்த்து இயற்கை எரிவாயுவை பயன்படுகதத வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது இதனைத் தொடர்ந்தே டீசல் வாகனங்களின் சேவை நிறுத்தப்பட்டது. (உ-9)

## 13 பேர் பலி

ஹென்யா மாந்திரி நகரில் பாலத்தில் சென்று கொண்டிருந்த இரண்டு பேருந்துகள் மோதிக்கொண்டதில் பதின்மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் இருபத்திரண்டு பேர் காயமடைந்துள்ளனர். (து)

ஊழல் குற்றச் சாட்டின் எதிரொலி

# பாரதிய ஜனதாவை நீக்கிவிட தமிழக முதல்வர் அதிரடி முடிவு?

(சென்னை)

பா.ம.க தமிழக ராஜீவ் காங்கிரஸ், ஜனதா தளம், ம.தி.மு.க வரிசையில் பா.ஜ.க வுக்கும் 'குட் பை' சொல்ல தி.மு.க அதிரடி முடிவெடுக்கவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆயுதப் பேர ஊழல் குற்றச் சாட்டில் சிக்கித்தவிக்கும் பா.ஜ காவுடன் தொடர்பு வைத்திருப்பது தமது வெற்றிக்கு இடையூறாக இருக்கலாம் என்றெண்ணிய கருணாநிதி தனது கூட்டணியில் இருந்து அதனைக் கழற்றிவிட முயற்சி மேற்கொண்டுள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை பா. ஜ; கட்சிக்கு ஒதுக்கிய இடங்களை ம.தி.மு. கவிற்கு கொடுத்து அவர்களை தம் பக்கம் மீண்டும் இழுக்க முதல்வர் முனையக் கூடும் எனவும் ஊகங்கள் வெளியாகியுள்ளன. (உ-9)

# நன்றி கெட்ட மனிதராக முதல்வர் நடக்கிறாராம்; ஆறுமுகம் ஆவேசம்

(சென்னை)

கட்சிக்காக உழைத்தவர்களை கண்டு கொள்ளாமல் நன்றி கெட்ட மனிதராக கருணாநிதி நடந்துகொள்கிறார் என தீப்பொறி ஆறுமுகம் ஆவேசமாகப் பேசி உள்ளார்.

தி.மு.க, அங்கம் வகிக்கும் வாஜ்பாய் அரசினது ஆயுத பேர ஊழலைக் கண்டித்து அ.இ.அ.தி.மு.க மதுரையில் ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றில் பேசிய போதே ஆறுமுகம் இதனைத் தெரிவித்தார்.

தி மு.க விற்காக எத்தனையோ வருடமாகச் சேவை செய்த எனக்கு கருணாநிதி துரோகம் புரிந்து விட்டார்.

இந்த வி த்தில் தான் அவர் தமிழ்க் குடிமகன் விடயத்திலும் நடந்துள்ளார். என்று தீப்பொறி ஆறுமுகம் மேலும் கருணாநிதி மீது குற்றம் சாட்டியுள்ளார்.

ஆறுமுகம் தற்போது அ.இ. அ.தி.மு.க விற்காக பிரச்சாரம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ம. தி. மு. க. வின் கட்டுக்கோப்பை சீர்குலைக்க முதல்வர் வஞ்சகத் திட்டம்

தி.மு.க வில் இருந்து தொகுதிப் பங்கீட்டில் எழுந்த பிணக்கு காரணமாக பிரிந்து சென்ற ம.தி.மு.க; வினை உடைக்க தி.மு.க. தலைவர் கருணாநிதி முயற்சி மேற்கொண்டுள்ளதாக ஊர்ஜிதப் படுத்தப்பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

கருணாநிதியின் இம்முயற்சியின் ஓர் அங்கமாக அண்மையில் ம.தி.மு.க வின் 9 மாவட்டச் செயலாளர்களை அழைத்து முதல்வர் இரகசியப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்;

இப்பேச்சுக்களைத் தொடர்ந்து அவ் 9 மாவட்ட செயலாளர்களும் தி.மு.க. பக்கம் செல்லத் தயாராக இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கலைஞரின் இவ்வஞ்சகத்தனமான செயலினை ம.தி மு.க பொதுச்செயலர் வை.கோபாலசாமி கடுமையாகச் சாடியுள்ளார். (உ-9

ரோந்து சென்ற

# பொலிஸார் இருவர் துப்பாக்கி சூட்டுக்குப் பலி

(இஸ்தான்புல்)

துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லுக்கு அருகில் பொலிஸார் ரோந்து சென்ற கார் ஒன்றின் மீது தீவிரவாதக் கும்பல் ஒன்று நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பொலிஸார் பலியாகியுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று நடந்த இச்சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட தீவிரவாதிகள் யார் என்று இதுவரை இனம் காணப்படவில்லையென பொலிஸ் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இதேவேளை, தீவிர இடதுசாரிகள், முஸ்லிம் தீவிரவாதிகள் மற்றும் குர்திஷ் பிரிவினைவாதிகளே பொலிஸார் மீது இவ்வாறான தாக்குதல்களை வழமையாக நடாத்துவது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# தாய்வான்-அமெரிக்க நாடுகளின் செல்வாக்கை முறியடிக்க முஸ்தீபு

(பீஜிங்)

ஆறு லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான விஜயம் ஒன்றை சீனாவின் ஜனாதிபதி ஜியாங்செமின் மேற்கொள்ளவுள்ளார்.

சிலி, ஆர்ஜன்டீனா, உருகுவே பிரேஸில், கியூபா மற்றும் வெனிசுவலா ஆகிய நாடுகளுக்கே ஜனாதிபதி ஸெமின் தலைமையிலான குழு செல்லவுள்ளது.

இவ் விஜயத்தின் போது பொருளாதாரம், வர்த்தகம், விளையாட்டு, முதலீடு, மற்றும் கல்வி ஆகிய துறைகள் தொடர்பாக 20 ஒப்பந்தங்களை ஸெமின் கைச்சாத்திடுவார்.

பொருளாதார வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையில் அமையும் இவ் விஜயத்தின் போது, இப் பிராந்தியத்தில் நிலவும் அமெரிக்கா மற்றும் தாய்வானின் செல்வாக்கை முறியடிக்கும் முயற்சி பற்றியும் ஆராயப்படும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-9)

புதுச்சேரி மாவட்டத்தில்

# தி. மு. க. மக்கள் காங்கிரஸ் 9 தொகுதிகள் வழங்க இணக்கம்

(காரைக்கால்)

புதுச்சேரியில் சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட திராவிட முன்னேற்றக்கழகமும் மக்கள் காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உடன் பாட்டிற்கு வந்துள்ளன.

இதன்படி புதுச்சேரி மக்கள் காங்கிரஸிற்கு ஒன்பது இடங்களும் மற்றைய இடங்கள், தி.மு.க. பாரதிய ஜனதா, ஜனதாதள் போன்ற கூட்டுக் கட்சிகளுக்கு வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டு ஒப்பந்தத்தில் புதுவைமக்கள் காங்கிரஸ்சாரபில் இலட்சுமி நாராயணன், கண்ணன்போன்றோர் கைச்சாத்திட்டனர். (உ-து)

# 10ஆயிரத்திற்கும் அதிகமானோர் பொருளாதாரத் தடையால் இறப்பு

## ஈராக்கில் அவல வாழ்வு தொடர்கிறது

(டெஹ்ரான்)

ஐ; நா. வின் பொருளாதாரத தடை காரணமாககடந்த காலங்களில் ஈராக்கில் பஞ்சம், பசி, பட்டினி போன்றவற்றால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

இப்படிக் கூறுகிறது ஈராக் சுகாதார அமைச்சக புள்ளி விபர அறிக்கை.

அவ் அறிக்கையில், பொருளாதாரமற்றும் மருந்து தடைகளால் இறந்து போனவர்களில் 7 ஆயிரத்து 500 பேர் சிறுவர்கள் என்றும் பெரும்பாலானவர்கள் போஷாக்கின்மை, வயிற்றோட்டம், வாந்திபேதிஎன்பவற்றால் இறந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-து)

## தி. மு. க.-ம. தி. மு. க. பிணக்கில் தலையிட பி. ஜே. பி. மறுப்பு

(சென்னை)

தி.மு.க. விற்கும் ம.தி.மு.க. விற்கும் இடையில் தொகுதிப் பங்கீடு விடயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பிணக்கில் தலையிட பாரதிய ஜனதா விரும்பவில்லையென அக்கட்சியின் மாநில பொதுச் செயலர் இல. கணேசன் கூறியுள்ளார்.

தேசியஜனநாயகக் கூட்டணியில் இருக்கின்ற எவரும் தி.மு.க., ம.தி.மு.க. இடையே ஏற்பட்டபிணக்கை வரவேற்க மாட்டார்கள்:

இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டதை அவர்கள் தவிர்த்திருக்கலாம் என்று மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை பாரதிய ஜனதாவுக்கு தொடர்ந்தும் மாற்று அணியில் இருந்து ஆதரவு வழங்கப்போவதாக ம.தி.மு.க. கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது; (உ-9)

## செய்திப்பரல்

★ கடந்த 29 ஆம் திகதியன்று பாரிய ஆடைக் கண் காட்சி ஒன்று சீனத்தலைநகர் பீக்கிங்கில் நடைபெற்றுள்ளது.

★ வெள்ளை மாளிகையில் உள்ள ரோஜாத் தோட்டத்தில் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாறக்கை அமெரிக்க ஜனாதிபதி புஷ் சந்தித்துப் பேசினார்.

★ பங்களாதேஷில் எதிர்க் கட்சிகள் செய்த ஆர்ப்பாட்டங்களில் 48 பேர் இறந்தமைக்கு எதிர்க் கட்சிகள்தான்பொறுப்பு என்றுபிரதமர் ஹஸினா கூறினார்.

8 ஆவது உலகதரிசனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்குவது

மில்க்வைற் நீலசோப்
மில்க்வைற் பவர் சோப்

தயாரிப்பாளர்களான
மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

# அரபாத்தின் மெய்ப்பாதுகாவலர்கள் இஸ்ரேல் படைகளால் சிறைப்பிடிப்பு

பலஸ்தீனத் தலைவர் யஸிர் அரபாத்தின் மெய்ப்பாதுகாவலர்கள் பலரை இஸ்ரேலியப் படைகள் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் இவ் இஸ்ரேல்-பலஸ்தீனமோதல்களில் இதுவரை 465பேர் பலியாகியுள்ளனர்.

இவர்களில் 381 பேர் பலஸ்தீனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய இராணுவ நிலையொன்று அண்மையில் பலஸ்தீனர்களின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது;

அதையடுத்து பலஸ்தீனர்களின் தாக்குதலில் இஸ்ரேலிய வீரர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து அப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் மோதல்கள் தீவிரமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

அவையறியார்சொல்லற்மேற் கொள்பவர் சொல்லின் வகையறியார்வல்லதூ உம்இல்

குறள்

## வலம்புரி

### அருக்குமொழி ஐயாமாரின் சுயநலம்!


போர்வாள் என்று கலைஞர் கருணாநிதியால் புகழாரம் சூட்டப்பட்டவர்தான் வை.கோபாலசாமி. அரசியல் வாதிகள் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பாடுவதில் விற்பன்னர்கள் அதிலும்தமிழ் நாட்டு அரசியல் வாதிகளென்றால் சொல்லத் தேவையில்லை. அடுக்கு மொழித் தமிழில் அப்படியே ஒரு பாட்டு, சபையிலிருந்து கரகோஷம் எழும். தன் அலுவல் முடிந்துவிட்டால் போதும். அடுத்த நாள் வேறோர் கட்சியில் ஏன் புதிய கட்சியில் கூட அவரைக் காணலாம். கொள்கையின்றி, கோட்பாடின்றி கட்சி விட்டுக்கட்சி பாயும் கலாசாரம் தமிழகத்தில் பெரும் மலிவு.

முதலமைச்சர் கருணாநிதி தனது மகன் ஸ்ராலினை அவையில் முந்தியிருக்கச் செய்யப்போய் வை.கோவை இழந்தார். வை. கோவும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்து கருணாநிதிக்குப் பதிலடி கொடுத்தார். எனினும் வை.கோவும் கருணாநிதியின் பாசறையில் வளர்ந்தவராதலால் மீண்டும் அவர்கள் இருவரிடையேயும் ஓர் கூட்டுஉடன் படிக்கை ஏற்பட்டது இக் கூட்டினால் தமிழக அரசியலில் பெரும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்து பெரும் விமர்சனத்திற்கு ஆளான போது தந்தையினைப் பகைத்துச்சென்ற தனயன் மீண்டும் தந்தையிடமே வந்துவிட்டான் என்று வை.கோ பதிலடி கொடுத்தார். அதைக் கேட்ட பலர் இனிமேல் கலைஞரையும், வை.கோவையும் பிரிக்க முடியாதென நம்பினர். ஆனால் இன்று நிலைமை மாறி இருவரும் எதிரும் புதிருமாக மாறிவிட்டார்கள்.

அவர்கள் மாறினால் நமக்கென்னய்யா வில்லண்டம் என்று கேட்டால் அங்கே தான் சிக்கலேயிருக்கிறது. தமக்குள்ளே தந்தை மகன் என்று மேடைகளில் கொட்டி முழங்கும் தமிழக அரசியல் வாதிகள் சந்தர்ப்பத்திற்கேற்ப கட்சிதாவுகின்றனரென்றால் இலங்கைத் தமிழர்கள் பற்றியெல்லாம் உணர்ச்சி பொங்கக் கதைப்பது தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் ஓர்செல்வாக்கை ஏற்படுத்தவேயொழிய, இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு உதவுவதற்கல்ல என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

வெள்ளி நற் சிந்தனை

# பரமனைப்பாடிப் பணிந்து வழிபாடு ஆற்றும் பல்வேறு சிறப்புக்கள் மிக்க பங்குனி உத்தரம்



பங்குனி மாத உத்திர நட்சத்திரம் கூடிய நன்நாளைப் பற்றிக் கணித நூலோர் ''ஓது பங்குனியின் திங்கள் உத்திரம் இன்றே, ஈதுநன் முகூர்த்தம்'' என வரும் அடிகள் மூலம் பங்குனி உத்தர நாளை சிறப்பானதொரு முகூர்த்த நாளாகக் கூறியுள்ளனர்.

பங்குனி உத்திர முகூர்த்த நன்நாளிலேயே பார்வதி-பரமேஸ்வரனுடைய திருக்கல்யாண வைபவம் நடந்ததாகக் கந்தபுராணத்திலே கூறப்படுகின்றது. இந்நாளைக் கல்யாண சுந்தரர் மூர்த்தமாக சிறப்பித்து சிவனை வழிபாடு செய்வதும் பங்குனி மாதத்தின் தனிச்சிறப்பாகும்.

மேலும் இந்தப் பங்குனி உத்திர தினத்திலே தான் இராமன் - சீதை திருமணமும், இலக்குமணன் - ஊர்மிளா விவாகமும், பரதன்-மாண்டவீ, சத்துருக்கன்-சுருதகீர்த்தி திருமண வைபவங்களும் நடந்ததாக புராணங்கள் எடுத்துக் கூறியுள்ளன.

### சம்பந்தர் கூற்று

பங்குனிஉத்திர நன்நாளிற் பிறந்ததனால் அர்ச்சுனனுக்குப் ''பல்குணன்'' எனப் பெயர் வந்ததாக மகாபாரதம் எடுத்துக் கூறியுள்ளது. பல்லாண்டுகளாகவே இத்தினம் சிறப்புடன் போற்றி வழிபாடுகள் நடாத்தப்பட்டு வருவதனாலே ஞானக் குழந்தையாரும். தம் பூம்பாவைப் பதிகத்தில்

''மலிவிழா வீதி மடநல்லார்
மாமயிலை
கலிவிழாக் கண்டான்
கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய்
பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்''

எனப் பங்குனி உத்திர விழாவின் தனிச் சிறப்பை அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

### அப்பர் தேவாரம்

இது மட்டுமன்றி அப்பர் (திருநாவுக்கரசு) சுவாமிகளும்,

''ஆராய்ந்தடித் தொண்டர்
ஆனிப்பொன் ஆரூர்
அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி
உத்திரம் பாற்படுத்தான்''

எனவரும் அடிகள் மூலம் பங்குனி உத்திரத்தை சிறப்பித்துப் பாடியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

சுந்தரமூர்த்தி நாயனாரும் பரவையாரிடத்தில் பங்குனி உத்திரதிருவிழாவிற்கு மீண்டு வருவதாகக் கூறி விடை பெற்றுச் சென்றதாகவும் வரலாறு கூறுகின்றது.

### சுபமுகூர்த்தம்

இந்நாளின் சிறப்பினாலே இத்தினத்திலே சைவப்பெருமக்கள் சுபமுகூர்த்தங்களைச் சிறப்பாக விரும்பிச் செய்வதும் ஆலயங்களில் விழாக்களும், வழிபாடுகளும் செய்து விரதம் அனுட்டித்து தானதர்மங்கள் செய்வதும் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

நீர்வைமணி

### இடும்பன் அழிவு

அகத்திய முனிவர் சிவகிரி-சக்திகிரி ஆகிய இருமலைகளையும் சிவசக்தி சொரூபமாகக் கொண்டு வழிபட்டு, ஒருமுறை இவ்விருமலைகளையும் பொதிகை மலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்க விரும்பிஇடும்பனின்உதவியை நாடினார். இடும்பன் முருகப் பெருமானின் மூலமந்திரத்தை உச்சரித்தவாறு இருமலைகளையும் பிரமா விட்டுணுக்களைத் தண்டமாகப் பாவித்துக் காவடி போற் தூக்கிக் கொண்டு சென்றான். பழனிமலையடி வாரத்தில் முருகன் காட்சி தரவும் ஆணவங் கொண்ட இடும்பன் கந்தப்பெருமானைக் கருத்திற் கொள்ளாது மலைவி இறப்பி கொடுத்த உணவை உண்டு விட்டு மலைகளைத் தூக்கினான். ஆனால் அப்போது அவனால் அது முடியாது போகவே, இது சிறுவன முருகனின் செயலென ஆத்திரமடைந்து முருகனுடன் போரிட்டு மாய்ந்தான்.

### காவடி ஆட்டம்

இதனாற்துன்புற்ற இடும்பி முருகனிடம் மன்றாடி இடும்பனை உயிர்ப்பித்து இருமலைகளையும் காவடியாகக் கொண்டு ஆடி முருகனை மகிழ்வித்து அப்பாற் பொதிகைமலை சென்றாள். இடும்பன் முருக பக்தியால் உய்ந்த நாள் பங்குனி உத்திர நன்நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

பழனிமலை அடிவாரத்தில் இன்றும் இடும்பனை வழிபட்டே முருகனிடம் பக்தர்கள் செல்வது காணக்கூடியதாயுள்ளது. எனவே இந்நாளில் நாமும் வழிபாடுகள் செய்து நற்கதியடைவோமாக.

சர்வதேச செ. சி. சங்க

## கப்பல் மூலம் தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கக்கப்பல் மூலம் குடாநாட்டிற்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 503 பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர் தபால்கள் அடங்கிய 64 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், 500,1000 ரூபா பெறுமதியான முத்திரைகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதைவிட நேற்று முன்தினம் விமானம் மூலம் 10 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டதாகவும், அவை உடனேயே தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு விட்டதாகவும் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10)

## வலிமேற்கு பி.செயலராக க.குணராசா நியமனம்

(மானிப்பாய்)

வலி மேற்கு சங்கானை பிரதேச செயலராக க. குணராசா கடந்த 5 ஆம் திகதி முதல் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் முன்னர் நல்லூர் பிரதேச செயலராகப் பணியாற்றியவரென்பது குறிப்பிடத்தக்கது. (உ-120)

## தொல்லையாக மாறிவரும் வடமராட்சிக்கான தொலைபேசி சேவை

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக தொலைபேசி சேவைகள் சீரில்லாமையால்வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் பல சிக்கல்கள் எழுந்திருப்பதாக பருத்தித்துறை நகர சபை உப தலைவர் நா மணிவண்ணன் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சீரற்ற தொலைபேசி சேவை தொடர்பாகபொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஒருவரும் தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜர்கள் கையளித்தும், நேரில் பேச்சுவார்த்தை நடத்தியும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை என தொலைபேசி உரிமையாளர் சங்கத்தினர் ஆட்சேபம் வெளியிட்டுள்ளனர். [உ-23]

## தவக்காலச் சிந்தனை - 38



நண்பர்கள் சந்தித்தோம். தற்செயலாக குழந்தைப் பருவ நாட்களைப் பற்றி பேச ஆரம்பித்தோம். ஒவ்வொருவருக்கும் பிடித்தது, பிடிக்காதது, செய்த குட்டித் திருட்டுக்கள் இடப்பட்ட பட்டப் பெயர்கள் இவையெல்லாம் எங்கள் பேச்சில் இடம்பிடித்தன. இயற்கையாகவே மனதிலே ஓர் இதம், புதுமை, இளமை பெருக்கெடுத்தது. இளமை நாட்களில் செய்யும் பயணம் இனிமையே. இயேசுவுக்கு இளமை நாட்களில் மறக்க முடியாத இடம் யோர்தான் நதிப்புறம். இது யோவான் திருமுழுக்கு கொடுத்த இடம் மாத்திரமல்ல, இயேசு திருமுழுக்குப் பெற்ற இடம். நீ என் அன்பான மகன், உன் செயல்களால் பூரிப்படைகிறேன் என தந்தையால் வெளிப்படுத்தப்பட்ட பூமி இது. இயேசுவைப் பிடித்துக் கொலை செய்ய யூதர்கள் தேடும்பொழுது தந்தையின் திருவுளம் வெளிப்படுத்தப்பட்ட பூமிக்குச் செல்கிறார். தனித்திருக்கிறார். இத் திருப்பயணமும், தனிமையும் எதிர்வரும் துன்பத்தைத்தாங்கள் பலம் தருகிறது. நம் ஒவ்வொருவருக்கும் நம்மை உருவாக்கிய நிகழ்வு. இடம், நபர் நிச்சயமாக வாழ்க்கைப் பயணத்தில் உண்டு. நம்மை ஆக்கிய அந் நிலைகளுக்கு மீண்டும் மீண்டும் பயணிப்பது உண்மையிலேயே புனிதப் பயணமாக அமையும்.

காவலன்

## மருதடிவிநாயகர் ஆலயத்தில் சண்டிலிப்பாய் பி.செயலக தற்காலிக அலுவலகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயவருடாந்தமஹோற்சவத்தை யொட்டி வழமை போல் இம் முறையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் தற்காலிக அலுவலகமொன்றுவடக்குவீதியிலுள்ள கட்டடமொன்றில் இயங்கி வருகிறது.

சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கிராமஉத்தியோகத்தர்களும் இவ் வலுவலகத்திலிருந்து ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து வருவதைக் காண முடிகிறது. (உ-120)

## ஓய்வுபெற்ற மறுமாதமே ஓய்வூதியம்வழங்க திட்டம்

அரசாங்க ஊழியர்கள் ஓய்வுபெற்ற அடுத்தமாதமே ஓய்வூதியம் வழங்கப்படும் என பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டத்துறை நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறுகின்ற மாதததில் பெற்ற சம்பளத்தில் எழுபது வீதத்தினை ஓய்வூதியமாக வழங்கும்படி பொதுநிர்வாக உ நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றுநிருபங்களை அனுப்பிவைத்திருப்பதாகவும் அமைச்சர் மேலும்தெரிவித்துள்ளார். செ

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்

**நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை**

189, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1712)

# ஆரியபாஷாவிருத்தி சங்கத்திற்கு ரூபா4 லட்சம் ஒதுக்கப்படும்

## மணிபல்லவராஜன் தெரிவிப்பு

தமிழ் வளர்ச்சிக்காக முன்னெடுக்கப்படும் எந்தவொரு முயற்சிக்கும் எமது ஆதரவும் பங்களிப்பும் என்றும் உண்டென்று ஆரிய திராவிட பாஷாவிருத்திச்சங்கத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய நல்லூர் பிரதேச சபைத்தலைவரும் ஈ பி டி.பி யாழ் மாவட்ட உதவி அமைப்பாளருமான க: மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரிய திராவிட பாஷாவிருத்திச்சங்கத்திறப்புவிழா யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம் பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய மணிபல்லவராஜன் மேலும் தெரிவிக்கையில்

தமிழ் வளர்ச்சி கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவும் ஆசியும் என்றும் உண்டென்றும் சங்கத்தின் செயற்பாட்டுக்கு அவர் நான்கு இலட்சம் ரூபாவை ஒதுக்கித்தர சம்மதித்துள்ளாரென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [இ]

### அவசரகாலச் சட்டம் நீடிப்பு

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று பாராளுமன்றில் 22 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

பிரேரணைக்கு ஆதரவாக 111 வாக்குகளும் எதிராக 89 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

இதே வேளை பாதுகாப்பு அமைச்சின் மீதான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் 102 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் மேற்படி இருவாக்கெடுப்பிலும்கலந்துகொள்ளவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### அல்வாயில் ஆயுதம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அல்வாய்ப் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் பலவற்றை படையினர் மீட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு மீட்கப்பட்ட பெருமளவு ஆயுதங்களும் ரவைகளும் பிரதேசவாசிஒருவரால் வழங்கப்பட்ட தகவலையடுத்து மீட்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர். பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்துள்ளார். (ந-5)

### சமாதான நீதவான்

[யாழ்ப்பாணம்]

கந்தையா பகவத்சிங்கம் யாழ்.மாவட்ட நீதவான் இ: த.விக்னராஜாமுன்னிலையில் யாழ் மாவட்ட சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணம் செயலக புனர்வாழ்வுக் கிளையில் பணிபுரிந்து வருகிறார். [வ]

# போலி ஆவணங்களுடன் வெளிநாடு செல்ல முயன்ற வடபகுதி 3 இளைஞர் கைது

(கொழும்பு)

போலி ஆவணம், விஸா ஆகியவற்றுடன்நாட்டைவிட்டு வெளியேற முயற்சித்த மூன்று வடபகுதி இளைஞர்கள் கடந்த திங்களன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டதாகக்குற்றம் சாட்டி 200 க்கும் அதிகமானவர்கள் தற்போது நீர் கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளரென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி நபர்கள் குடியகல்வு குடிவரவுசட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தற்போது விசாரணைகளின் பொருட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [உ-9]

மங்கையர்மனம்மயங்கும்
மங்காத அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்

**மகாநதி
ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1711)

# கு. ந. போராட்டத்திற்கு வ. கி. மா. சிற்றூழியர் சங்கமும் ஆதரவு

(திருகோணமலை)

யாழ் மாநகரசபை நிர்வாகத்தினரால் வேலை நீக்கம் செய்யப்பட்ட, குடும்ப நல சேவையாளர்களால் மேற்கொள்ளப்படும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு வடக்கு கிழக்கு மாகாண அரச பொது சிற்றூழியர் சங்கம் தனது முழுமையான ஆதரவை வழங்கும்.

மாநகரசபையில்பணிபுரிந்த 36 குடும்ப நல சேவையாளர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டமை அநீதியான செயலென்றும், இவ் விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மற்றும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் சிற்றூழியர்சங்க செயலாளர் ஆ.சதிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குடும்பநல சேவையாளர்களின் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு எட்டப்படாது விட்டால், வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் குடும்பநல சேவையாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மறியல் போராட்டத்தில் குதிப்போமென்று சிற்றூழியர் சங்கம் எச்சரித்துள்ளது. ]இ-05]

### மிதி வெடியில் கால் இழப்பு

(வவுனியா)

பளை மாசார்ப் பகுதியில் தேங்காய் பறிப்பதற்காக வன்னியில் இருந்து சென்ற இளம் குடும்பஸ்த்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் தர்மபுரத்தை சேர்ந்த செல்வத்துரை சிவதாசன் (வயது-24) என்பவரே காலை இழந்தவராவர். (ந-5)

### 117வது வயதில் மரணம்

அமைச்சர் அலவி மௌலானாவின் பாட்டனார் அஸ்ரப் அகமத் அலிமசூர் மௌலான நேற்று தனது 117 வது வயதில் காலமானார். [ந-5]

### வீழ்ந்து காயம்

கோழி ஒன்று சைக்கிளுக்குள் சிக்கியதால் வீழ்ந்துகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 4ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பணிபுரியும் இராசலிங்கம் என்பவர் கடமையின் நிமித்தம் துவிச்சக்கர வண்டியில் வீதியால் சென்றுகொண்டிருந்த சமயம் திடீரென அவரது சைக்கிள் சில்லுக்குள் சிக்குண்ட கோழியினால் இவர் வீதியில் வீழ்ந்து பலமாக காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். [உ-120]

### அரசு . . .

அடுத்து புலிகளுடனான பேச்சிற்கு அரசுஇடம் திகதி ஆகியன குறித்து அறிவிக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்பாக அரசு புதுவருடப் பிறப்பையொட்டி யுத்த நிறுத்த அறிவிப்பொன்றை அறிவிக்கலாம் எனவும் அதன் பின் அரசு புலிகளுடனான பேச்சிற்கு அனுசரணையாக இந்த யுத்த நிறுத்தம்நீடிக்கப்படலாம் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [வ]

### 60 ஆயிரம்

கொண்டுவந்துள்ளோம்; அப்போதெல்லாம் இலங்கை அரசு அதனைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை ஒன்றும் எடுப்பதில்லை. அவற்றை அரசு உதாசீனம் செய்தே வந்துள்ளது என்று தனது சஞ்சனத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் தற்போது அமுலில் உள்ளபயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டுமென்றும், அல்லது சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் மாற்றுச் சட்ட மூலம் ஒன்றை கொண்டுவந்து அமுல்ப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

தற்போது தடுப்புக்காவலில் உள்ளவர்களை உத்தியோக பூர்வமான இடங்களில் தடுத்துவைக்க வேண்டும் என்றும், 1995ம் ஆண்டில் இருந்து காணாமல் போனோர் தொடர்பாக சுயாதீன ஆணைக்குழுவொன்று அமைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அரச படைகளுடன் இணைந்து செயற்படும் தமிழ்க்குழுக்கள் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்றும் சிபார்சு செய்திருந்த போதிலும் அரசு அதில் எந்த விடயத்தையும் கடைப் பிடிக்கவில்லையென அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை ஐ.நா. அதிகாரிகள் இலங்கைக்கு இதனை வற்புறுத்த வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணாமல் போனோர் தொகை தங்களுடைய புள்ளிவிபரப்படி சுமார் 60 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாகவும் அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

### சர்வதேச

கில்மன் இருதரப்பும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபடுவதன் மூலம் அமைதியை ஏற்படுத்த முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்புக்குமிடையில் நல்லிணக்க புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.

சர்வதேச கண்காணிப்பு குழுஒன்றின் மூலம்யுத்த நிறுத்தம் கண்காணிக்கப்பட வேண்டும் என்றுஅவர்மேலும் தெரிவித்துள்ளார்.

சந்திப்பில்கலந்துகொண்ட பிரமுகர் இலங்கையில் மனித உரிமைமீறல்கள், வன்னிக்கான பொருளாதாரத்தடை போன்றவிடயங்கள் குறித்து விளக்கமளித்ததுடன் இலங்கையில் வழமையான சூழ்நிலை உருவாகும் வரை அமெரிக்கா இலங்கைக்கு இராணுவஉதவிகளை வழங்கக்கூடாது என்றும் வலியுறுத்திக் கேட்டுள்ளார்கள்.

### மன்னாரில் . . .

அடிப்படைமனிதஉரிமைமீறல் வழக்கு தொடர்ந் திருக்கும் பெண் என இந்தப் பட்டியல் முடிவற்று தொடர்கிறது.

படையினர் மத்தியிலும், பொலிசார் மத்தியிலும் இது பௌத்த சிங்கள நாடு என்ற உணர்வை ஊட்டுவோரே இந்த வன்முறையின் சூத்திரதாரிகளாவர்.

இந்த மேலாதிக்க மனோபாவம் தான் யாழ் நூல்நிலையம் எரிக்கப்படுவதற்கும் பல இனவாத நோக்கிலான படுகொலைகளுக்கும், சிறைப்படுகொலைகளுக்கும், பல பாலியல் பலாத்காரப்படு கொலைகளுக்கும் வழிவகுத்துள்ளது.

இத்தகைய காட்டு மிராண்டித்தனமான சம்பவங்கள் தொடராமல் தடுக்கவும், சம்பந்தப் பட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படவும் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டுமென்று அச் செய்திக்குறிப்பில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### குடும்ப . . .

றும் ஈ.பி.டி.பிபாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க நேற்றுமுதல் தற்காலிகமாக உண்ணாவிரதத்தை ஒத்திவைத்துள்ளதாக பாதிக்கப்பட்ட சுகாதார ஊழியர்களின் செயற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது தொடர்பாக சுகாதார ஊழியர்களின் செயற்பாட்டுக்குழு பத்திரிகைக்குறிப் பொன்றைநேற்று வெளியிட்டது.

வடக்கு கிழக்கு மாகாண ஆளுனரின் உத்தரவுக்கமைய வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக மாநகரசபையின்நிர்வாகப்பிரச்சினைகளைவிசாரிக்க உயரதிகாரியொருவர்நியமிக்கபட்டுள்ளதால்நாம்உண்ணாவிரதப் போரட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதுடன் இன்று முதல் தமது வெளிக்களப் பணிகள் வழமை போல் நடைபெறுமென்றும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன், தமது போரட்டத்துக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

உள்ளத்தில் தன்னம்பிகையையும் குதூகலிப்பையும் அளிக்கக் கூடிய
கவர்ச்சிகரமான

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட மகளிர் ஆடவர்
குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்
புத்தாண்டை முன்னிட்டு மிகவும் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

**சுஜானாஸ் அன் றெஸ்பொயின்ற்**

23, 24A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1713)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.